# சாதி மத பேதத்தைச் சாடுங்கள்



எதிர்ப்புக்கு அஞ்சாதீர்.
ஏளனத்தைக் கேட்டு ஏமாறாதீர்.
மதத்தின் முன் மண்டியிடாதீர்.
கடவுளைக் கண்டு கருத்தழியாதீர்.
அறிவே துணை
மானமே மனிதனை மனிதனாக்குகிறது
என்பதை உணருங்கள்.
உலுத்தர் பேச்சை
உதறித் தள்ளுங்கள்.
சமத்துவம் நாடுங்கள்.
சகோதரத்துவம் கோருங்கள்.
சாதி மத பேதத்தைச் சாடுங்கள்.
தோல்வி கண்டு சலிப்புறாதீர்.
மாற்றார் மமதை கண்டு மனம் மருளாதீர்.
சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.
அதன் வழி செயலாற்றுங்கள் செம்மல்களே!

**- பேரறிஞர் அண்ணா**

---

கும்பகோணம் மாநகர இளைஞர் அணி சார்பில்

## துணை முதல்வர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் கோவி.செழியன் - மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வழங்கினர்!

தஞ்சாவூர், டிச.16-

கும்பகோணம் மாநகர திமுக இளைஞரணி சார்பாக, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாநகர துணை அமைப்பாளர் கோவி.அழகேசன் ஏற்பாட்டில், 47 கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நடத்தியும், 47 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களுடன் புத்தக பையும் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகளும் வழங்கியதுடன் அனைவருக்கும் அறுசுவை மதிய உணவும் பரிமாறி கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கும்பகோணம் மாநகர திமுக இளைஞரணி சார்பில், மாநகர துணை அமைப்பாளர் கோவி.அழகேசன் ஏற்பாட்டில், பச்சையப்பா தெருவில் அமைந்துள்ள பாலாஜி மஹாலில் கும்பகோணம் மாநகர திமுக செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் தலைமையில் ஆயிரம் நபர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் ஆகியோர் நலத் திட்ட உதவிகளை வழங்கினர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலில், பள்ளி மாணவ மாணவியர்கள் 47 பேருக்கு கல்வி உபகரணங்களுடன் புத்தகப்பை யும், தொடர்ந்து 47 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கப் பட்டது. பிறகு, 47 கர்ப்பிணி பெண்களுக்கு மலர் மாலை அணிவித்து, கையில் கண்ணாடி வளையல்கள் அணிவித்து, சந்தனம் பூசி, நலுங்கு வைத்து, ஆசிர்வாத திலகமிட்டு, வளைகாப்பு நடத்தி அவர்களுக்கு சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கண்தானம் செய்ய பதிவு செய்த 47 நபர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது. பின்னர் தூய்மை காவலர்கள் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதுடன், விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை மதிய உணவும் பரிமாறப்பட்டது.

---

## வலைதளங்களில் வலம் வருவது!




---

பகுதிச் செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார்!

## சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 198-வது வட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் கூட்டம்!

### ஆற்காடு அகிலன் - இளம் பேச்சாளர் ரா.குமுதாஸ்ரீ சிறப்புரை!

### பா.தேவக்குமார் தலைமை!

சென்னை, டிச. 16 -

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி காரப்பாக்கம் அண்ணா தெரு 198 வது வட்டத்தின் சார்பாக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி உதய நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் அறிவிப்பின்படி, வட்ட செயலாளர் பா.தேவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ச.அரவிந்த் ரமேஷ் முன்னிலை வகித்துப் பேசினார். கழக பேச்சாளர் ஆற்காடு அகிலன், இளம் பேச்சாளர் ரா.குமுதாஸ்ரீ ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் மு.மனோகரன், ஒன்றிய கழக செயலாளர் ஜி . வெங்கடேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் த.பஷீர், எம்.கே.ஏழுமலை, அ.ஹரிகிருஷ்ணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், எம். பார்த்திபன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெ.இ. பாண்டியன், கே.வீ.தியாகராஜன், பகுதி கழக நிர்வாகிகள் வீ.தனசேகரன், வே. வீ.குமரேசன், கே.டி.ரவி, சாந்திபசுபதி, மாமன்ற உறுப்பினர்கள் வ.பாபு எம்.சி, ஜி.சங்கர், அ.முருகேசன், வட்டக் கழக செயலாளர் ஆர்.நாகராஜ், த.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர்.உமாபதி, எஸ். தயாளன், ஆர்சுரேஷ்பாபு , ஹரி எஸ்.பி.ஹரி மாவட்ட குழு உறுப்பினர் என்.வேதகிரி, பகுதி கழக வட்டக் கழக, மாவட்ட, பகுதி, வட்ட, அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

---

தலைமை: தரமணி தே.கோபி! எஸ்.பாஸ்கரன் எம்.சி. முனிலை!

## 178 ‘அ’ வட்டம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - மு.மகேஷ்குமார் - பிரபாகர்ராஜா - ஜின்னா - நா.நவின் சிறப்புரை!

சென்னை,டிச.16-

கழக இளைஞரணி செயலாளர் தமிழ் நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டக் கழகச் செயலாளர் தரமணி தே. கோபி தலைமையில், வேளச்சேரி மேற்கு பகுதி 178அ வட்டம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (15.12.2024 திங்கட் கிழமை) மாலை 6 மணிக்கு தரமணி 5சி பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி., சு. சேகர், வேளச்சேரி மே.ப. செயலாளர், வே.ஆனந்தன் எம்.சி., தரமணி ஏ.வி. ரங்கா, எம்.கே.காமராஜ், மு.ரகுநாதன், இரா.தனசேகரன், ஐ.சி.எஸ். இரா. தஷ்ணா ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் கோ.மூர்த்தி, ந.டில்லிகுமார், சே.மைதிலி, வழக்கறிஞர் எம்.பி.சிவஞானம், சித்ராவெங்கடேசன், வழக்கறிஞர் பி.செல்வ குமார், ஜெ.ரேணுகாதேவி, டி.லட்சுமணன், எஸ்.நித்திய பிரகாஷ், ஜெயராமன், சீனிவாசன், பூங்கொடி, சேகர், ஜெஸ்டின், டி.வெங்கடேசன், எம்.நாகையா, ச. சுந்தர், ஏ.பரமசிவம், ஆர். பாலசுப்பிரமணியன், எம். கே.ராஜசேகர், ஜே.பாபுஜி பிரியதர்ஷன், முருகன், வீரைய்யா, ஆனந்த், பலராமன், விஜயகுமார், வெங்கட்டுமார், வி.தினேஷ், நவநீதகிருஷ்ணன், அன்பழகன், கண்ணன், பாஸ்கர் ஆகியோ வரவேற்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர்- அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தலைமை கழக பேச்சாளர் தாம்பரம் ஜின்னா, இளம் பேச்சாளர் நா.நவின், இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.பி. பிரபாகராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் வேளச்சேரி மேற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் த. பார்த்திபன், பொ.த.மதிவாணன், கே.என். தாமோதரன், க.பாராதிதாசன், எஸ்.முருகவேல், ஜி.பி.எஸ். பாலசதீஷ், வி.சக்திவேல் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் த.பூபாலகிருஷ்ணன் நன்றியுரையாற்றுகிறார்.

---

## சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

# “உதயநிதியின் உதயநாள்” விழா

### 364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும் 182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



16.12.2024 - திங்கட்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | ஆவடி பாஸ்கர்<br>க.ஷேவிதா | 170 அ வட்டம் – கலிக்குன்றம், அம்பேத்கர் சிலை அருகில், சைதாப்பேட்டை கிழக்கு பகுதி. | மு.மகேஷ்லாரன்ஸ்<br>மாவட்ட பிரதிநிதி<br>கவுசல்யா மகளிர் தொ அணி ப.அ |
| 2. | வேலூர் ரமேஷ்<br>த.தாரணி | 138 அ வட்டம் – பிள்ளையார் கோயில் தெரு, ஜாபர்கான் பேட்டை, கலைஞர் நகர் தெற்கு பகுதி, விருகம்பாக்கம். | கோபி சங்குபிள்ளை<br>இளைஞர்அணி வட்ட அமைப்பாளர் |
| 3. | தாம்பரம் ஜின்னா<br>நா.நவீன் | 178 அ வட்டம் – தரமணி பேருந்து நிலையம் அருகில், வேளச்சேரி மேற்கு பகுதி. | தே.கோபி<br>வட்ட செயலாளர் |
| 4. | சைதை சாதிக்<br>ஜெ.விக்னேஷ்வரி | 151 வட்டம் – அன்னை சத்யா நகர், போரூர், மதுரவாயல் தெற்கு பகுதி. | ச.சங்கர் கணேஷ் MC<br>இளைஞர் அணி மா.து.அமைப்பாளர் |
| 5. | தமிழ்கேள்வி செந்தில்வேல்<br>கு.சுருதி | 194 அ வட்டம் – திருவள்ளுவர் சாலை, பெத்தேல் நகர், ஈஞ்சம்பாக்கம். | கா.வீ.தியாகராஜன்<br>இளைஞர் அணி மா.து.அமைப்பாளர் |

AK DIGITAL PRINTING 9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

## சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் **மா.சுப்பிரமணியன்** B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.